# பாலர் கல்வி

| தொகுதி 28 | சோபகிருதுஸ்ரீ ஆவணி - புரட்டாசிமீ<br>1963 செப்டம்பர் | பகுதி 6 |
| --- | --- | --- |

## பாடதிட்டம் சீரமைப்பு

உலகிலே முன்னிற்கும் நாடுகளிலே கணிதம், விஞ்ஞானம் இவற்றின் தரத்தை மிகவும் உயர்த்தி வருகிறார்கள். நாகரிக வளர்ச்சிக்கு இவ்விரண்டினும் ஆற்றல் இன்றியமையாததாகக் கருதப்பெற்று வருவதால், கீழ் வகுப்புக்களிலிருந்தே நல்லதோர் அடிப்படையை அமைத்து வருகின்றனர். நமது தமிழகத்திலே இவை இரண்டினும் தரம் உயர்வதற்கு நாம் ஒன்றும் செய்யவில்லை. கணிதத்தில் பழைய முறைப்படி அளவினங்களையும் வாய்பாடுகளையும் நாம் அறவே அகற்றித் தசம முறை நாணயங்களையும் மெட்ரிக் முறை அளவினங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளோம். இதனால் நான்காம் படிவத்தில் நாம் கற்பித்துவந்தது பாதியளவு அவசியமில்லாததாகப் போய்விட்டது ; அதாவது பாதியளவு காலத்தை உயர்ந்த படிவப் பாடங்களைக் கற்பிக்கப் பயன்படுத்தலாம். இவ்வாறே ஐந்தாம் படிவத்திலும் ஆறும் படிவத்திலும் கால்பங்காவது அவசியமில்லாததாக இருக்கும். அன்றியும் பின்னங்கள், உத்தமப் பொது அளவு, அதமப் பொது மடங்கு, வாடிக்கை முறை இவைபோல்வனவற்றை முன்போல் அதிகமாகக் கற்பிக்கவேண்டிய அவசியமில்லை. நாம் பள்ளிகளிலே கற்பிக்க வேண்டியவற்றை ஆராய்ந்தால், இது காறும் 11 வருடங்கள் வரையிற் கற்பித்துவந்தனவற்றை 8 வருடங்களில் முடித்துக் கொள்ள இயலும் என்பது புலனாகும். இந்த 8 ஆண்டுகளிலும் இப்பாடங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டிய முறையிலே அமைதியாக, சிறுர்கள் புரிந்துகொள்ளும்வண்ணம் நாம் நன்கு கற்பிக்க இயலும். ஆக, நாம் முதன்முதலிற் செய்யவேண்டுவது கணிதத்தில் பாடதிட்டத்தை நன்கு ஆய்ந்து தரத்தை உயர்த்தப் பயன்படுமாறு திருத்தி அமைப்பதாகும். இந்த ஆண்டிலே கல்வித்துறை அதிகாரிகள், 6வது, 7வது படிவங்களிலே கற்பிக்கவேண்டிய பாடங்களை மூன்றாகப் பிரித்து, ஒரு பிரிவை 8வது படிவத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள் ; இது தாற்காலிகம் என்றே நம்புகிறோம். விரைவில் பாடதிட்டம் திருத்தியமைக்கப்பெறும் என்றும் நம்புகிறோம்.

விஞ்ஞானத்தைக் கற்பிப்பதற்கு ஆராய்ச்சிச் சாலையும் உபகரணங்களும் இன்றியமையாதனவாம். இவையில்லாமற் கற்பிக்கப்பெறும் பாடங்கள் சரியாக ஏற்றுக்கொள்ளப் பெற மாட்டா. இப்போதுள்ள பள்ளிக்கூடங்களிற் பலவற்றுள் இவ்வாறான

உபகரணங்கள் இல்லவே யில்லை; ஆசிரியர்கள் ஆராய்ச்சிகளை வாயாற் சொல்லிக்கொண்டு போகிறார்கள், அல்லது கரும்பலகையில் எழுதிக் காட்டுகிறார்கள். கைத்தொழில் பொறியியல் இவை நன்கு பரவவேண்டுமெனில், விஞ்ஞானத்தில்சிறார்களுக்கு நல்ல அடிப்படை வேண்டாமா? சிறிய பள்ளிக்கூடமாயினும் சரி, நாட்டுப் புறத்திலுள்ள பள்ளிக்கூடமாயினும் சரி, நாட்டுப் புறத்திலுள்ள பள்ளிக்கூடமாயினும் சரி, விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலை சிறார்களுக்கென அமைக்கப்பெறல் வேண்டும். இது பற்றி அரசியலார் உடனடியாகக் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகின்றோம்.

இதுவன்றி நூல்நிலையங்களை அபிவிருத்திசெய்யவேண்டும். சிறுவர்கள் படிப்பதற்கு விஞ்ஞானம் பற்றிய நூல்கள் தமிழிலே இயற்றப் பெற்று, பட விளக்கங்களுடன், நன்கு அச்சிடப் பெற்று வெளிவரவேண்டும். இவற்றைச் சிறுவர் சிறுமியர் யாவரும நன்கு படித்துப் பயன்பெற வேண்டும். இந்நூல்கள் தற்போது பிராயத்திற்கேற்பத் தரம்பெற அமைய வேண்டும். இவற்றை வாங்குவதற்கும், நூல் நிலையம் நன்கு இயங்குவதற்கும் வேண்டிய வசதிகள் செய்யப்பெறவேண்டும்.

சிறுவர் சிறுமியர்களை நம் நாட்டிலுள்ள தொழிற்சாலைகள், பொறியியற் சாலைகள் இவற்றிற்கு அழைத்துச் சென்று, அவர்கள் இயந்திரங்கள் இயங்கும் வகையினை நேரிற் காண வாய்ப்பு அளிக்கவேண்டும். இதற்கான திட்டத்தை அரசியலார் வகுத்து, இதற்காக ஆகும் செலவையும் அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இவ்வகையான சீரமைப்பு விரைவிற் நிகழ்ந்தால்தான், நாம் நாடு ஏனைய நாடுகளுடன் தலைதூக்கி நிற்க இயலும்.

---

# பாராட்டு

World Confederation of Organisation of the Teaching Profession (WCOPT) என்னும் பேரவையின் பன்னிரண்டாவது கூட்டம் அண்மையில் ரியோ டி ஜெநீரோவில் நிகழ்ந்தது. அதில் நமது உயர்திரு S. நடராஜன் அவர்கள் மூன்றாவது முறை தொடர்ந்து துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார் என்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்; அவர்களுக்கு நமது பாராட்டையும் தெரிவிக்கின்றோம். ஆசிரியர்க்கென அருந்தொண்டாற்றி வரும் இவரை நம் நாடு மாத்திரமன்றி உலகமும் போற்றுகின்றது. இவர் நீடு வாழ்ந்து ஆசிரியர்களது நிலையை மேலும் உயர்த்தித் தாமும் புகழ் பெறுமாறு இறைவன் அருள் புரிவாராக.

பள்ளிகளில் கற்பிக்கும் பாடங்களின் தரத்தை உயர்த்துவதற்காக All India Council of Educational Research என்பது அண்மையில் நிறுவப்பெற்று நன்கு இயங்கி வருகின்

றது. இதில் கணிதத்திற்கான உட் குழுவில் பாரதம் முழுவதிலும் சுமார் 15 ஆசிரியர்கள் பாட திட்டத்தையும், கற்பிக்கும் முறைகளையும் ஆராய்வதற் கும், பாடப் புத்தகங்களை எழுது வதற்கும் நியமிக்கப்பெற்றுள்ளனர். சென்னை இராச்சியத்திலிருந்து டாக் டர் A. நரசிங்கராவ், மாஜி கணிதப் பேராசிரியர், டாக்டர் V. S. கிருஷ் ணன், சென்னைப் பல்கலைக் கழகம், திரு T. S. ராஜகோபாலன், தலைமை யாசிரியர், இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி இவர்கள் மூவரும் அழைப்புப் பெற்று இரண்டு கூட்டங் களிற் கலந்துகொண்டனர். முதற் படிவம் முதல் பதினொன்றும் படிவம் ஈருகப் பாடதிட்டங்களை ஆய்ந்து, மாற்றி அமைத்து வருகின்றனர் இக் குழுவினர். இவர்களது முயற்சி பெரி தும் பயன்படும் என நம்புகின்றோம். சென்னையிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற இம்மூவர்க்கும் நமது பாராட்டு உரித்தாகும்.

----

# நாம் குருவுக்குச் செய்யவேண்டிய கடமை

(மத்திய அரசியல் கல்வித்துணையமைச்சர்
ஸ்ரீமதி T. S. ஸௌந்தரம் இராமச்சந்திரன்)

[1963-ஆம் ஆண்டு ஸெப்டம்பர் மீ 5-ஆந் தெய்தி, பாரதநாடு முழுதும் 'ஆசிரியர் நாள்' கொண்டாடப்படும். அந்நாள் நம் இராஷ்டிரபதி டாக்டர் S. இராதாகிருஷ்ணனது பிறந்த திரு-நாள். இவ்விசைவு உண்மையாகவே மிக்க மகிழ்ச்சியை விளைப்பதாகும். நம்மை இந்நன்னிலைக்கு உயர்த்திய குருமாருக்கு நாம் ஆயுள்முழுதும் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆத லின், அவர்களுக்கு நம் வணக்கத் தைச் செலுத்துவோமாக. நாம் நம் குருவிடம் அன்பும் மரியாதையும்



சென்னை மானிலத் தலைமை ஆசிரியர், ஒருவர் ராஷ்டிரபதியிடம் விருது வாங்கும் காட்சி



தேசீயக் கல்வி ஸ்தாபனத்தின் அஸ்தி வாரக் கல்லை ராஷ்டிரபதி நாட்டியபோது எடுத்த படம்



சாந்தனிகேதனில் ஒரு வகுப்பு

கொண்டு, ஆசிரியர் க்ஷேமநிதிக்குத் தாராளமாக நன்கொடை வழங்குதல் வேண்டும் என்னும் நம் கடமையை, ஸ்ரீமதி செளந்தரம் இராமச்சந்திரன், இக் கட்டுரையில் வற்புறுத்திக் கூறுகின்ருர்.]

பாரத தேசத்தில் மட்டுமன்றி உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் தொன்றுதொட்டுக் குரு பெருமதிப்புடன் நடத்தப்பட்டுவருகின்ருர். அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு மலிவுவிலையில் நூல்கள் எளிதில் வெளியிடப்படும் சகாப்தத்துக்கு முன், குருவே நாட்டின் அறிவுக்களஞ்சியமாக விளங்கினர். அக் காலத்தில், குருசிஷ்யர்களுக்கிடையே இருந்த தொடர்பு மிக நெருங்கியது; மிக்க சிறப்பும் பெருமையும் உடையது. 'மாதா பிதா குருர் தேவோ' என்பது முதுமொழிவாழ்த்து. கடவுளினும் குரு உயர்ந்தவர் என்பது அதன் பொருள். அவர் தம் மாணக்கருக்குத் தனித்தனியாகக் கற்பித்து அவர்களை நல்வழிப்படுத்தியமையால், அவர்கள்-சூக்ஷ்ம ஸ்தூலப் பொருளில்-தேர்ந்த கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் மிக வளர்ச்சியுற்று நன்மைபல அடைந்தனர். அவர் செய்த தொண்டு அதுமட்டுமன்று. அவர் அரசனுக்கும் அமைச்சர்குழுவினுக்கும் நல்லறிவுரை கூறி அவர்களை நன்னெறியில் செலுத்தி, நாட்டுக்கும் வழிகாட்டியாய் இருந்து நலம்பல புரிந்தார்.

இன்று, குருவினைப்பற்றிய பழங் கருத்து மாறிவிட்டது. குருவினையும் மாணக்கனையும்பற்றிய பழைய உயர்கருத்துக்கள் இக்காலத்தில் மதிக்கப்படுவதில்லை. இதற்கு முதற்காரணம், நாட்டு மக்கள் அனைவரும் கல்வியறிவைப் பெறுதல்வேண்டும் என்பதும், கல்வியைப் பெறுதல் குடியரசு நாட்டில் வாழும் குடிமக்களுள் ஒவ்வொருவருக்கும் பிறப்புரிமை என்னும் கொள்கையை ஒப்புக்கொள்ளுவதுமே ஆகும். மனிதசரித்திரத்தில் இது மிக நல்ல செயலே. ஆயின், இதன் பயனுக, ஆசிரியர்கள் மாணக்கர் இவர்களின் தொகை மிகப் பெருகிவிட்டது. அதனல், ஆசிரியருக்கும் மாணக்கருக்கும் இடையே இருந்த நெருங்கிய தொடர்பு வரவரக் குறைந்துவருகின்றது; ஆசிரியருக்குத் தம் மாணக்கரிடம் இருந்த நெருங்கிய தொடர்பும் அன்பும் செல்வாக்கும், அம் மாணக்கர்களுக்கு ஆசிரியர்பால் இருந்த மதிப்



கிண்டர் கார்டன் பள்ளியில் குழந்தைகள்

பும் குரு பக்தியும் சிறுகச்சிறுகக் குறைந்துகொண்டே வருகின்றது. எப்படியாயினும், இக் கல்வியின் விரிவு, ஆசிரியர் மாணக்கர் இவர்களிடையே இருந்த நெருங்கிய தொடர்பும் அன்பும் குறைதற்கு இடங் கொடுத்தல்வேண்டும். என்பதற்குத் தக்க காரணம் உள்ளதாகத் தெரியவில்லே. உண்மையை ஆராய்ந்து பார்க்குமிடத்து, இத் தொகைப்பெருக்கம் ஏற்பட்டிருப்பினும், அவர்களுக்கிடையே முன்பிருந்த நெருங்கிய தொடர்பினை மீண்டும் உண்டாக்கி வளர்த்தல் இயலுமாயின், குடியரசும் இவ் விரிந்த கல்வியும் எவ்வகையிலும் பயன்பெறும் என்று உணர்தல் வேண்டும்.

## ஒழுக்கவளர்ச்சி

ஒழுக்கவளர்ச்சி மிக இன்றியமையாதது என்பதனை நம் நாட்டுமக்கள் சிறிது காலமாக உணர்ந்துவருவது நல்லதோர் அறிகுறியாகும். ஆசிரியர்களுக்கும் மாணக்கருக்குமிடையே முன்பிருந்துவந்த நெருங்கிய ஆத்மீகத்தொடர்பு மீண்டும் உண்டாக்கப் பட்டாலன்றி, மாணக்கரின் கல்வியின் தரமும் ஒழுக்கவளர்ச்சியும் உறுதியான அஸ்திவாரத்தின்மேல் அமைக்கப்படா என்பதனையும் அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். பெற்றோர்கள் ஆசிரியரை நேசித்து நன்கு மதித்தல் வேண்டும். சமூகம்முழுதும் அவருக்கு ஓர் உயர்ந்த நிலையை அளித்தல்வேண்டும். இவற்றைச் செய்தாலன்றி, அம் மக்கள்கருத்து நிறைவேருது. ஆசிரியர்கள் கல்விக்குரிய பக்தியோடும் தம் வாழ்க்கையை நடத்தல் வேண்டும்; மாணக்கரின் நலத்தில் மிக்க அக்கறை காட்டுதல் வேண்டும். அவ்வாறு செய்தால், மாணக்கரேயன்றி, அவர்களுடைய பெற்றோர்களும் சமூகம்முழுதும் ஆசிரியர்களைப் பக்தியோடு மதித்துப் போற்றுவர். சமூகமும் ஆசிரியர்களும் இப் பரஸ்பரப்பொறுப்புக்களை மிக்க அளவில் உணர்ந்துவருகின்றனர் என்பதனை அறிந்து நாம் மகிழ்கின்றோம்.

## சமூகத்தில் ஆசிரியர்நிலை

சமூகத்தில் ஆசிரியர்களின் நிலையை உயர்த்துதல் வேண்டுமாயின், வாழ்க்கையை நடத்துதற்கு வேண்டிய பொருளை அவர்களுக்கு அளித்தல் வேண்டும் என்பது இன்றியமையாதது. 'திரு வேறு தெள்ளியர் ஆதலும் வேறு'—என்று மேற்கோள் காட்டி, என்றும் கற்றோர் வறுமைக்கு ஆளாயிருப்பர் என்பதனை ஒரு சாக்காகக் கொண்டு, ஆசிரியர்நலத்தைப்பற்றி எண்ணுமலிருப்பது ஆகாது. பழங் காலத்தில் சமூகம் குருமார்களுக்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் செய்து உதவிற்று. இவ்விருபதாம் நூற்றுண்டிலும், ஆசிரியர்களின் நலத்தைக் கருதி ஆவனசெய்வது தம் புனிதமான கடமை என்று பெற்றோர் கருதுகின்றனர். ஆசிரியர்களின் நிலை அவர்கள் பெறும் ஊதியத்தைமட்டும் பொறுத்ததன்று என்பதனையும் நாம் நினைவுகொள்ளல்வேண்டும். பெற்றோர்கள் ஆசிரியர்களை நேசித்து நன்கு மதித்தல் வேண்டும். ஆசிரியர்களும், தம் கடமைகளில் சிறிதும் தவருது, மாணக்கரின் நலத்தில் ஆழ்ந்த அக்கறையும் ஊக்கமும் காட்டுதல் வேண்டும். நம் பாரத தேசத்துக்கு இராஷ்டிரபதியாகவும் உபராஷ்டிர பதியாகவும் முதல்தர ஆசிரியர் இருவரை (டாக்டர் இராதாகிருஷ்ணன், டாக்டர் ஜாகீர் ஹுஸேன்) தேர்ந்தெடுத்திருப்பது நம் நற்பேறுகளுள் மிகச்

சிறந்ததாகும். ஆயின், இது மட்டும் போதாது. சமூகத்திலுள்ள ஒவ்வொரு ஆசிரியரும் தாம் அச் சமூகத்தால் நேசிக்கப்பட்டு நன்கு மதிக்கப்படு-வதை நன்கு உணர்தல் வேண்டும்; வருங்கால மக்களின் வாழ்க்கையை வளம்படுத்தும் பொறுப்பில் தமக்கும் முக்கியமான பங்குஉண்டு என்பதனை யும் உணர்தல் வேண்டும். இப் பொது வுணர்ச்சியை உண்டாக்குவதற்கே, ஆசிரியர் நாள் முக்கியமாகக் கொண்டா டப்படுகின்றது. இந்நாள் நம் இராஷ் டிரபதியின் ஜன்ம தினமாக இருப் பதும் மிகப் பொருத்தமுடையதாகும். இம்மங்கள நாளில், பெற்ருேர் ஒவ் வொருவரும் சமூகத்திலுள்ள ஒவ் வொருவரும் ஆசிரியர்களை நேசித்து வழிபடுதல் தம் கடமை என்பதனை நினைவுகொள்ளல் வேண்டும்; (அவ் வாறு செய்தால்தான், இளைஞர்க்கும் அத்தகைய மனப்பான்மை வளரும்.) அன்றியும், வருங்காலச்சமூகத்தை உயர்நிலைக்குக் கொண்டுவரும் பணி-யில் ஆசிரியர் தம் சிறந்த கடமையைச் செய்துவருகின்றனர் என்பதனை தாம் உணர்ந்து பாராட்டுதற்கு அறிகுறி யாக, ஆசிரியர் க்ஷேமநிதிக்குத் தாராள மாகப் பொருளுதவியைச் செய்தல் வேண்டும்.

## செயலர் எழுதுங் கடிதம் (2)

நாட்டின் செல்வமாகிய சிறுவர் சிறுமியர் ஓங்கிவர உழைத்து வரும் பெரியீர், வணக்கம்.

வெளி நாடுகளில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக ஆசிரியர் உழைத்துவருவதை நாம் நன்கறி வோம். அவர்களது உழைப்பின் பயனாக அவர்கள் வெளியிட்டு வருங் கட்டுரைகளை நாம் படித்துப் பெரு மகிழ்ச்சி கொள்கிருேம். சிறுவர் சிறுமியர் நாட்டின் செல்வம்; இவர் கள் இளமைப் பருவத்திற் கற்கும் பாடங்கள் நன்கு பயன் பெறவேண் டும், இவற்றை எளிதிற் பெருமகிழ்ச்சி யுடன் ஏற்கவேண்டும் என்று சீரிய நோக்குடனே இவ்வாறு உழைத்து வருகின்றனர் வெளிநாடுகளில் ஆசிரியர். நம் நாட்டிலுள்ள ஆசிரி யர்கள் ஆற்றலிலும் ஊக்கத்திலும் இவர்களைக் காட்டிலும் ஒருவகை யிலுங் குறைந்தவர்களல்லர். பல நூற்றுண்டுகளாகக் கல்விச் செல்வம் ஓங்கிவரும் இந்நாட்டில், இக்காலத் திற்கேற்பப் பாட திட்டம், கற்பிக்கும் முறைகள் இவைபற்றி ஆராய்ச்சிகள் நாம் அவசியம் செய்யவேண்டும். கற்பிக்கும் முறைகள், அந்த அந்த நாட்டின் பண்பாடு, நாட்டினரின் பழக்க வழக்கங்கள், நாட்டினரது பண்டை நாகரிகம் முதலியவற்றைப் பற்றியவை. ஆதலால் வெளிநாட்டு ஆராய்ச்சிகளை மாத்திரம் ஏற்றுக் கொண்டு கற்பிக்கும் முறைகளை வகுக் காமல், தேவைக்கேற்ப முறைகளை ஆய்ந்து வெளியிடக் குழுக்கள் இன்றியமையாதனவாம். இவ்வாறு குழுக்கள் நிறுவப்பெறுவதற்குமுன் அவ்வப்பள்ளிகளிலே ஆசிரியர் ஒருங்குகூடி ஆராய்ச்சிகள் நிகழ்த்து வது நன்ரும். இவ்வாராய்ச்சிகளின் விவரங்களை நமக்கென இயங்கிவரும் ''பாலர் கல்வியி''யில் நாம் பிரசுரம் செய்யலாம். கணிதம், விஞ்ஞானம், சரிதம், மொழிகள் இவற்றைக் கற்பிக் கும் வகை, இவைபற்றிய பாடதிட்டங் கள் இவற்றை ஆய்ந்து, தொடர்ந்து கட்டுரைகள் அனுப்பினல், இவற்றை இப்பத்திரிகையில் அச்சிடுவிப்போம். இரண்டு ஆண்டுகளாக இப்பத்திரிகை யின் தரத்தை உயர்த்தியுள்ளோம், அகில இந்தியாவிலே இது சிறந்த ''ஆசிரியர்-பத்திரிகை'' என்ற சிறப் பும் பெற்றுவிட்டதென்று பெரு மகிழ்ச்சி கொள்கிருேம். இதற்கு மேற்கூறிய வகையில் கட்டுரைகள் அளிக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். இதன் பிரசுரத்திற் கென உள்ள குழுவும் விஸ்தரிக்கப் பெற்றுள்ளது என்பதை யாவரும் அறிவர்.

வணக்கம்,

T. S. ராஜகோபாலன்.

# அதிசயம் ஆனால் உண்மை

(V. R. SUBRAMANIAN, H. M. A. C. C.
Factory Ele. School, Madukkarai)

விஞ்ஞானம் வளர நாடு உயரும்; நாடு உயர மக்கள் அறிவு பெருக வேண்டும். வளரும் சிறுவர்கள் தாமே வருங்காலப் பிரஜைகள்! ஆதலால் அவர்கள் விஞ்ஞான ஆர்வம் இன்று தூண்டப்பட்டால் ஆற்றல் மிகு விஞ்ஞான விந்தைகள் நாளை தோன்றும். இந்நோக்கு அடிப்படையில் விஞ்ஞானிகளின் வாழ்க்கையிலிருந்து சில துணுக்குகள் பயன்படுமென்று குறிப்பிடுகிறேன்.

சர் ஐஸக் நியூடன் ஒரு பூனை வளர்த்தார். அது அவர் அறைக்குள் இருந்த ஒரு ஓட்டை வழியாக அடிக்கடி வரும். ஒரு சமயம் அது குட்டி போட்டது. அவர் தம் வேலைக்காரனைக் கூப்பிட்டுக் குட்டி வரவும் போகவும் வேறொரு துவாரம் சுவரில் செய்யும்படி கட்டளை இட்டார். வேலைக்காரன் உடனே, "என்ன ஐயா, வேடிக்கையாக இருக்கிறது! தாய் வரும் ஓட்டை வழியாகவே குட்டியும் வந்து போகலாமே" என்றான். அப்போது தான் வேறு ஒரு ஓட்டை தேவை இல்லை என்பதை அவர் உணர்ந்தார். என்னே அவர் அறிவு மயக்கம்!

ஒரு சமயம் நியூடன் சாப்பாட்டிற்கு ஒரு விருந்தினரை அழைத்திருந்தார். அவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்தார். ஆனால் விஞ்ஞானி தமது ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். "இதோ வருகிறேன்" என்று பதில் சொல்லிவிட்டு அதை மறந்தே போய்விட்டார். வெகுநேரம் காத்திருந்த விருந்தாளி தம் பங்கு உணவைப் புசித்தார். பசி அடங்கவில்லை. நியூடனுக்கு வைக்கப்பட்டிருந்த உணவையும் அருந்திவிட்டுப் போய் விட்டார். வெகுநேரம் கழித்து வந்து பார்த்த நியூடன் இரு தட்டுகளும்காலியாய்க் கிடந்ததைப் பார்த்துத் தாம் உண்டதாகவே நினைத்துக்கொண்டு மேலும் தன் சோதனைச்சாலைக்குள் புகுந்துவிட்டார். அவர் நினைவுத் திறனை என்ன சொல்வது!

தாமஸ் ஆல்வா எடிசன் தந்தி சம்பந்தமாகக் கண்டுபிடித்த ஆராய்ச்சிக்காக (Gold and Stock Telegraph) கம்பனித் தலைவர் ஜனரல் மார்ஷல் லெப்பர்ட்ஸ் (Lepherds) என்பவர் நாற்பது ஆயிரம் டாலர், எதிர் பாராத அளவுக்கு, ஒரு செக் கொடுத்தார். அதைப் பாங்கியில் மாற்றிக் கொள்ள அவருக்குத் தெரியவில்லை. குமாஸ்தா பாங்கியில் பணம் தர மறுத்துவிட்டார். செக் மாறவில்லை என்று திரும்பிக் கொடுத்துவிட்டார் லெப்பர்ட்ஸ் இடமே. செக் பாங்கியில் கொடுப்பதற்குமுன் அதன் பின்புறத்தில் கையொப்பமிட்டுத்தாம் இன்னார் என்பதை நிரூபிக்க வேண்டுமென்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. ஐசுவரியம் குவித்த அமெரிக்க நாட்டில் வாழ்ந்தவருக்கு என்ன பேதமை!

மேலும் செக் மாற்றப்பட்டுப் பணம் கொடுக்கப்பட்ட பிறகு அக்காகித நோட்டுக் கட்டுக்களைக் கால் சட்டையிலும் பாக்கெட்டுகளிலும் திணித்துக்

கொண்டு இரைதின்ற தவளைபோல் வெளிவந்தார். ரயில் பிரயாணம் செய்து ஊருக்கு வரவேண்டி இருந்த தால் பாக்கி இருந்த பணக் கட்டு களைப் பெட்டியில் போட்டு அதன் மேல் உட்கார்ந்துகொண்டு இரவெல்லாம் கண் விழித்துக்கொண்டே சிரமப்பட்டு வந்து சேர்ந்தார். இவை களை யெல்லாம் அறிந்த லெப்பர்ட்ஸ் சிரித்தார். பிறகு ஒரு ஆளை அனுப்பிப் பாங்கியில் தம் பெயரில் ஒரு கணக்கு வைத்துக் கொள்ளும் முறை, செக் மாற்றுவது, கொடுப்பது ஆகிய விஷயங்களைக் கற்பிக்கச் செய்தார். விஞ்ஞானியின் பரிதாப நிலையை என்னென்பது!

விஞ்ஞானி ஆர்க்கிமிடீஸ், மன்னன் சைரக்கியூஸ் கொடுத்த பொன் முடியை ஆராய்ச்சி செய்து தட்டான் மோசம் செய்து வெள்ளியைக் கலந்திருப்பது உண்மைதான் என்பதை நிரூபித்தார். அவர் தொட்டித் தண்ணீரில் குளித்தபோது திடீரென ஒரு உண்மையைக் கண்டறியலானார். அப்போது ஏற்பட்ட களிப்பால் உடம்பைத்துடைத்து ஆடை அணியவும் மறந்து 'கண்டு கொண்டேன்; கண்டுகொண்டேன்!' என்று கூவிக் கொண்டே ஓடினார். என்ன மானக் கேடான செயல்!

ஜார்ஜ் ஸ்டீபென்சன் புகைவண்டி கண்டுபிடித்ததைப் பார்த்து மக்கள் அது ஒரு ஆபத்து விளைவிக்கும் கருவி என்றும், அதன் புகை விஷம் என்றும், ஆடுமாடுகளைக் கொல்லும் என்றும், அதிலிருந்து கிளம்பும் தீப் பொறிகள் ஏதோ பிசாசு கக்கும் தீ என்றும், உலகத்தையே நாசம் செய்துவிடும் என்றும் பயமுறுத்த மக்கள் அதைக் கண்டு அஞ்சி ஓடினர் இங்கிலாந்து மக்கள் 19ம் நூற்றாண்டுத் துவக்கத்தில் வாழ்ந்து வந்ததெப்படி?

டாக்டர் லிஸ்டர் தற்கால இரண சிகிச்சை முறைகளைக் கண்டுபிடித்தவர். அவர் ஒரு நாள் கிளாஸ்கோவிலுள்ள அரசினர் மருத்துவச் சாலையில் நோயாளிகளைப் பார்த்து வரும்போது முழங்கை ஒடிந்த சிறுமி ஒருத்தி தனக்கு வைத்தியம் செய்வதுபோல் தன் தலையணைக்கீழ் வைத்திருந்த ஒரு துணிப் பொம்மைக்கும் கால் ஒடிந்திருப்பதைக் காட்டி "மரத்தூள் எல்லாம் வெளிவருகிறது. இதற்கும் சிகிச்சை செய்ய முடியுமா? முடிந்தால் தயவு கூர்ந்து செய்து கொடுங்கள்" என்று மிக்க பரிவுடன் கேட்டாள். லிஸ்டர் குழந்தையின் வேண்டுகோளின்படியே பணியை மிக்க பொறுமையோடு ஏற்றுக்கிழிந்திருந்த துணியைத் தைத்துக் கொடுத்தார். சிறுமியும் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தாள். எப்படி அவரது பண்பும், பரிவும்!

1900 ஆண்டில் கியூபாவில் மஞ்சள் காய்ச்சல் கடுமையாகப் பரவியபோது காரணம் கண்டறிய ஒரு விஞ்ஞானக் கமிஷனை ஐக்கிய நாட்டு அரசாங்கம் அமைத்தது. அதில் ஓர் அங்கத்தினரான டாக்டர் லாசர் (Dr. Lazear) பரிசோதனைக்காக நோய்க் கிருமிகளைத்தம் இரத்தத்தில் ஏற்றிக் கொண்டு தம் உயிரையே அர்ப்பணித்துத் தியாகியானார். விரோதியை விரட்டவரும் போர் வீரனைப்போல் வியாதியை ஒழித்துக்கட்ட உயிர் கொடுத்த உத்தமர் அன்றோ அவர்!

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (குறள்)

(தொடரும்)

# நெல்லை மாவட்ட ஆசிரியர் கழகம்

## வருடாந்திர மகாநாடு 13-7-63

நெல்லை மாவட்ட ஆசிரியர் கழகத்தின் வருடாந்திர மகாநாடு 13-7-63-ல் திருநெல்வேலி சாப்டர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. பாளையங்கோட்டை ஜான்ஸ் கல்லூரித் துணைத்தலைவர் டி.எ. தங்கசாமி M.A. தேசீயக் கொடியேற்றினார். பாளையங்கோட்டை சேவியர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வர். ரெவரெண்டு அருள் ஜோசப் சுவாமிகள் தலைமை வகித்தார். பாராளுமன்ற உறுப்பினர் P. முத்தையா பிள்ளை மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். ஆசிரியர் கழகத்தலைவர் டி. கே. ஷண்முகசுந்தரம் பி.எ.எல்.டி. வரவேற்புரை நிகழ்த்தினார். சாப்டர் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் ஆர்தர் ஆசீர்வாதம் பிரதிநிதிகளை வரவேற்றார். வித்வான் பி. கே. அருணாசல கவுண்டர் உயர்நிலைப் பள்ளிக் கல்வி என்பது பற்றியும், திரு டி. பேரின்பராஜ் ஆரம்பக் கல்வி பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 63-64–க்குக் கழகத்தின் தலைவராக திரு டி. கே. சண்முகசுந்தரம் பி.எ.எ.ல்.டி. யும் செயலாளராக திரு எ. ராஜாமணியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேனீர் விருந்துக் குப்பின் காரியதரிசி ராஜாமணி நன்றி கூறினார். தேசீய கீதம் பாடி மகாநாடு இனிது முடிந்தது.

### தீர்மானங்கள்

1. ஆரம்பப்பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:35 வருகை இருக்கவேண்டுமென்று வந்துள்ள சர்க்கார் ஆணை எண் 744 (31-3-63) மாணவரின் கல்வித்தரத்தைக் குறைப்பதோடு ஆசிரியர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்துவதால் ஷை ஆணையை ரத்துசெய்து முன்போல் 1:25 ஆக ஆசிரியர் மாணவர் விகிதம் இருக்கும் படியாகவும், வகுப்புகளில் பிரிவு ஏற்படும் காலத்தில் அந்தந்த வகுப்புகளில் பிள்ளைகளைக் கணக்கிட்டு ஆசிரியர் நியமனம் செய்யவேண்டுமென்றும், பிரசவ லீவு, உரிமை லீவு எடுக்கும் காலத்து வழக்கம்போல் பதில் ஆசிரியர்கள் நியமனம் செய்ய வழிவகை செய்யும்படியும் சர்க்காரை இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

2. செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளிகளில் எந்த வகுப்பில் போதனை செய்தாலும் அவர்களுக்குச் செகண்டரி கிரேடு ஆசிரியர் சம்பளம் கொடுக்கவேண்டுமாய்ச் சர்க்காரை இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

3. தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு N. G. O. வினருக்கும், சர்க்கார் பள்ளி ஸ்தல ஸ்தாபனப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் அளிப்பது போல் இலவச மருத்துவ வசதி அளிக்க உத்தரவு கொடுக்கச் சர்க்காரை இந்த மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

4, உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் (Periods) பீரியடு நிர்ணயக் கட்டுப்பாடு இல்லாது முழு நேரக் கைவேலை ஆசிரியர், உடற் பயிற்சி ஆசிரியர், தமிழ் பண்டிதர்கள் நியமனம் செய்ய உத்தரவு பிறப்பிக்கும்படி சர்க்காரை இந்த மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

5. ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளிகளில் வேலை செய்தாலும், உயர்தரப் பள்ளிகளில் வேலை செய்தாலும், ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் பரஸ்பரம் மாறிச் செல்லும்போது, ஒரே ஆசிரியர் ஊழியர் பட்டியலைக் கடைப்பிடித்து ஊழிய கால உயர்வு

கொடுக்க உத்தரவு கொடுக்கும்படி சர்க்காரை இந்த மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

6. பள்ளித்துணை ஆய்வாளர் நியமனத் தேர்வுக்கும் சமூகக் கல்வி அமைப்பாளர் நியமனத்திற்கும் அரசாங்க ஊழியர் ஸ்தல ஸ்தான ஊழியர்களைப்போல் தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர் கட்கும் வாய்ப்பளிக்க வேண்டுமாய் சர்க்காரை இந்த மகாநாடு வேண்டிக் கொள் கிறது.

7. தனியார் பள்ளிகளிலுள்ள உபரி ஆசிரியர்களைப் பஞ்சாயத்துப் பள்ளிகளில் ஏற்படும் காலி ஸ்தானங் களில் நியமிக்க வேண்டும் என்ற உத்தரவை மாற்றி அவர்கள் அப் பள்ளியிலேயே தொடர்ந்து வேலை செய்து வரவேண்டுமாய் உத்தரவு பிறப்பிக்கச் சர்க்காரை இந்த மகா நாடு கேட்டுக் கொள்கிறது.

8. உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கும் விஷயத்தில் பள்ளித்துணை ஆய்வாளர் அனுமதி யுடன், பஞ்சாயத்து யூனியன் அனு மதியும் பெற வேண்டுமென்று இருக்கும் விதியைத் தளர்த்திப் பள் ளித்துணை ஆய்வாளர் அனுமதி மட் டும் பெற்றால் போதுமென்று வகை செய்யும்படி இந்த மகாநாடு சர்க்கா ரைக் கேட்டுக் கொள்கிறது.

8. உதவி பெறும் பள்ளிகளில் ஒரு மாதம் என்பது 21-ம் தேதியில் இருந்து மாதா மாதம் 20-ம் தேதி வரை இருப்பது ஆசிரியர்கள் க்ஷேம நிதிக் கணக்கிற்கு இடையூறாய் இருப் பதால் அதை மாற்றி முன் போல் இருக்கச் சர்க்காரை இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது. அத்துடன் ஆசிரியர் சேமநிதியில் இருக்கும் பணத்திற்கு வட்டிவிகிதத்தை மத்திய அரசாங்க ஊழியர்களுக்குச் சேமநிதி கொடுத்து வருவதுபோல் உயர்த்திக் கொடுக்கும்படி சர்க்காரை இந்த மகா நாடு கேட்டுக்கொள்கிறது.


———

# எகோ (ECHO)

## ஆசிய ஆசிரியர்களின் நிலையை ஆராயும்

# கல்வித்துறை நிபுணர் மகாநாடு





மேலேயுள்ள இடப்பக்கப்படத்தில் ஆசிய ஆசிரியர்நிலையைக்குறித்து நிபுணர்கூட்டத்தில் ஸ்ரீமாந் S. நடராஜன் சொற்பொழிவாற்றுகிறார். அவருக்கு இடப்பக்கத்தில் அமர்ந்திருப்பவர் இந்திய கல்விமந்திரி ஸ்ரீமாந் K. L. ஸ்ரீமாலி. வலப்பக்க நிழற்படத்தில் இருப்பவர்; இடமிருந்து வலம்: WCOTP நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினராகிய ஜார்ஜ், R. ஆஷ்பிரிஜ் (நியூஸிலந்து); குயன் ஹூ சின் (வியட்நாம்); தாய் ஸி சுங் (கொரியா); Dr. ஸெஸிலியோ புடாங் (பிலிப்பைன்ஸ்). இவர்கள் WCOTP-இன் உபதலைவரது பிரசங்கத்தைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

சென்ற மாதம் புதுடில்லியில் ஆசியாவில் உள்ள ஆசிரியர்நிலை என்னும் விஷயத்தை ஆராய்தற்கு WCOTP-யினால் கூட்டப்பட்ட முதல்கல்விநிபுணர்கூட்டத்தில் செய்யப்பட்ட சிபார்சுகளை, ஆசியாவில் கல்வித்துறையில் மொத்தத்தில் ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகின்ற அனுபவம் ஆதரிக்கின்றது.

முப்பத்தாறு கல்வித்துறைநிபுணர்கள் ஆசிரியர்களின் நிலையைப்பற்றி நுணுகி விவாதித்து ஆராயப் பலமணிநேரத்தைச் செலவிட்டனர். அவர்களுள் பெரும்பாலோர் கற்பிக்குந் துறையில் நாற்பதாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம் வாய்ந்தவர்கள்.

ஆசியா, ஆஸ்திரேலியா, நியூஸீலண்டு ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் அக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அவர்களுள் கல்வித்துறையில் புகழ்பெற்ற நூலாசிரியர்களும், முன்னாள் அமைச்சர்ஒருவரும் தேசீய மகாநாடுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞரும், பல்கலைக்கழக, அதிகாரிகளும் இருந்தனர்.

ஆசியாவில் உள்ள ஆசிரியர்நிலை என்று WCOPT வெளியிட்ட தொடக்கவறிக்கையை ஆராய்ந்து சரிபார்த்ததற்கென்று அக் கூட்டம்

கூட்டப்பட்டது. அக்டோபர் மாதத்தில் இக் கல்விநிபுணரின் கூட்டத்தின் சிபார்சுகளையும் அறிக்கைகளையும் ஆதாரமாகக் கொண்ட ஆசிரியர்நிலையறிக்கையின் திருந்திய பதிப்பு வெளியிடப்பட்டு, UNESCO-விற்குச் சமர்ப்பிக்கப்படும்.

ஆஸ்திரேலியா, சீனக்குடியரசு, இந்தியா, இஸ்ரேல், ஜப்பான், கொரியா, மலேயா, நியூஸிலண்டு, ஃபிலிப்பைன்ஸ், தாய்லாந்து, சிங்கப்பூர், துருக்கி, வியட்நாம்-என்னும் இந்நாடுகளில் உள்ள ஆசிரியர்-சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்விநிபுணர்கள் அக் கூட்டத்திற்கு விஜயஞ்செய்திருந்தனர்; இந்தியாவிலிருந்தும் ஃபிலிப்பைன்ஸிலிருந்தும் 'பார்வையாளரும்' வந்திருந்தனர்.

WCOTP-யின் உபதலைவரும் ஆசியக்கமிட்டியின் தலைவருமான திரு. S. நடராஜன் அவர்கள் அக் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்கள். இந்தியக்கல்விமந்திரியாகிய திரு. K. L. ஸ்ரீமாலி தொடக்கவுரையை நிகழ்த்தினர். ஆசிரியர்கள் தம்முடைய சமூகபொருளாதாரநிலைகளை உயர்த்துதற்குத் தாமே பொறுப்பாளிகள் என்று அவர் உரைத்தார்.

ஜார்ஜ் R. ஆஷ்பிரிட்ஜ (நியூஸிலண்டு), ஆசிரியர்களின் தொழில்-நிலையைப்பற்றி விவாதிக்கும்பொழுது, பின்வருமாறு கூறினர்: "ஒவ்வொரு நாளும் வகுப்பறையில் ஆசிரியர்கள் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். நாம் கற்பிப்பது முக்கியமானதாயினும், அது நம் நிலையின் முக்கியத்துவத்தினும் குறைந்ததேயாகும். ஆசியாவில் உள்ள உரிமைபெற்ற நாடுகளில் வசிக்கும் ஒவ்வொருவரும் கௌரவத்தோடும் சமத்துவத்தோடும் வாழ்தற்கு வேண்டிய முயற்சியில் வெற்றிபெறுதல் வேண்டுமாயின், நன்கு அமைக்கப்பட்ட ஆசிரியர்தொழிற்சங்கங்கள் மிக இன்றியமையாதவை."

'ஃபிலிப்பைன் பப்ளிக் ஸ்கூல்' ஆசிரியர்சங்கத்தைச் சார்ந்த டாக்டர் செஸிலியோ புடாங் என்பவர் ஆசிரியர்களின் கல்விநிலையைக்-குறித்து விவாதித்தபொழுது, பின்வருமாறு கூறினர்: "ஆசியாவில் உள்ள ஆசிரியர்களின் தனிப்பண்புகள் ஒருபுறமிருக்க, அவர்களின் கல்வி-நிலையைப் பாதிக்கும் மிக முக்கியப் பகுதிகள் பின் வருவனவாகும்:— ஆசிரியரின் கல்வியறிவு, பள்ளிக்கூடத்தில் மாணுக்கரைத் தேர்ந்தெடுக்கும் முறை, ஆசிரியர் போதனைமுறைக்கல்லூரிகளின் பாடத்திட்டம், தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு நற்சாட்சிப்பத்திரம் (யோக்யதாபத்திரம்) அளிக்கும் முறை, ஆசிரியர்களின் மேற்படிப்பு, தொழிலில் இருந்துகொண்டே ஆசிரியர்கள் படிக்கும் மேற்படிப்பு."

KFEA-யின் நிர்வாகக்காரியதரிசியான தாய் ஸி சுங் என்பவர், WCOTP என்னும் உலகஸம்மேளனம் ஆசிரியர்களின் பொருளாதார-நிலையை உயர்த்துதற்குச் செய்யுந் தொண்டினை இன்னும் பலரும் அறியும்-படி செய்தல்வேண்டும் என்றும், அத் தொண்டினுக்குப் பிறரும் ஆதரவளித்து வலுப்படுத்தல்வேண்டும் என்றும் அக் கூட்டத்தில் கூறினர்.

வியட்நாமின் ஆசிரியர்பொதுச்சங்கத்தின் ஸெக்ரெடரி-ஜனரலான கூயன் ஒ சின் என்னும் அறிஞர் ஆசிய ஆசிரியர்களின் அரசியல்-தேசீய நிலையைக்குறித்துப் பேசும்பொழுது, "தற்காலச்சமூகத்தில்

ஆசிரியர்களின் கௌரவம் குறைந்துவருகின்றது. அதாவது, அவர்களால் காத்து வளர்க்கப்படும் பண்பாடும் ஒழுக்கமும் குறைத்து மதிப்பிடப்படுகின்றன. இதற்கு முக்கியமான காரணம், நம் கல்விமுறைகள் பொது-வாழ்விற்கு அவசியமான தத்துவங்களுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்-படாமையே ஆகும். ஆசிரியர்தொழிற்கு உரிய மதிப்பை மீண்டும் அடைதற்கு வேண்டிய பணிகளைச் செய்வது ஆசிரியர்சங்கங்களின் முக்கிய கடமையாகும்.''

## ஆசிய ஆசிரியர்களின் நிலையை ஆராய்தற்குக் கூட்டிய கல்விநிபுணர் மகாநாடு.

### சிபார்சுகளின் சுருக்கம்

**ஆசிரியருக்குப் பயிற்சியளித்தல்**:—தொடக்கப்பள்ளிகளிலும், 'ஸெகண்டெரி' பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் ஒரேவித அடிப் படைத்தகுதிகளைப் பெற்றிருத்தல்வேண்டும்; அவர்களுக்கு அளிக்கும் போதனுமுறைப்பயிற்சியும் ஒரேவிதமாய் இருத்தல் வேண்டும். இவ்வாறு செய்யமுடியாத தேசங்களில், 'ஸெகண்டெரி' பள்ளிக்கூடப்பாடத்திட்டம் முழுதினையும் வெற்றிகரமாக முடித்து, பின்னர்க் குறைந்தது இரண்டாண் டுக்காலப் போதனுமுறைப்பயிற்சியும் பெறுதலே, தொடக்கப்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியருக்குக் குறைந்தபக்ஷ யோக்கியதாம்சமாய் இருத்தல் வேண்டும். 'ஸெகண்டெரி' பள்ளிக்கூடங்களில் கற்பிக்கும் ஆசிரியர், பல்கலைக்கழகப்பட்டத்தைப் பெற்று, பின்னர்க் குறைந்தது ஓராண்டுப் போதனுமுறைப்பயிற்சியும் பெற்றவராய் இருத்தல் வேண்டும்; அல்லது, 'ஸெகண்டெரி'பள்ளிக்கல்வித்திட்டம் முழுதினையும் வெற்றிகரமாக முடித்து, பல்கலைக்கழகப்பட்டத்தையோ அதற்குச் சமானமான ஒன்றனையோ பெறுதற்குரிய — பொதுக்கல்வியும் போதனுமுறைக்கல்வியும் பிணைக்கப்பட்ட—ஒரு கல்வித்திட்டத்தில் பயிற்சியும் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

**ஆசிரியராய் இருந்துகொண்டே மேற்கல்வி கற்றல்**: ஆசிரியர்களாய் இருப்பவர் தாமே மனமுவந்து தொடர்ந்து கல்விபயிலுதற்கு உரிய திட் டம்ஒன்றனை வகுத்தல் வேண்டும். இதற்குப் பாராட்டு, பரிசு இவற்றின்-மூலம் தக்க தூண்டுதல் வேண்டும். ஆசிரியர்ஒருவர் தம் கல்விநிலையை உயர்த்திக்கொள்ளப் பயன்படுமாறு, கல்லூரி அல்லது பல்கலைக்கழகம் இவற்றுள் ஒன்றனோடு சேர்ந்துக் இவ்வகை, கல்விவகுப்புக்களை நடைபெறச்செய்யலாம்.

**ஆசிரியர்களின் பொருளாதாரநிலை**: ஆசிரியர்கள் தங்கள் முழு-நேரத்தையும் தம் தொழிலுக்கே பயன்படுத்துதற்கு வேண்டிய வாழ்க்கைத்-தரத்தைப் பெற்றிருக்கும் முறையில், அவர்களது பொருளாதாரநிலை அமைந்திருத்தல் வேண்டும்.

**ஆசிரியர்களின் அரசியல்உரிமைகள்**: ஆசிரியர்கள், தனிமனிதர் குடி-மக்கள் என்ற முறையில், எல்லா அரசியல்உரிமைகளையும் பெறுதல் வேண்டும்[1]; ஆயின், ஆசிரியர்சங்கங்கள், அரசியல்தொடர்பற்றனவாய் இருத்தல் வேண்டும். எந்த அரசியல்கட்சியின் ஆணைக்கும் கட்டுப்பட்டு நடக்கும் முறையில் அச் சங்கங்கள் இருத்தலாகாது. பஞ்சாயத்து, நகர-சபை, ராஜ்ய சபை முதலியவற்றில் அங்கத்தினராதற்கு நடைபெறும்

தேர்தலில் கலந்துகொள்ளுதற்கு உரிய உரிமையை ஒவ்வொரு ஆசிரியரும் பெறுதல்வேண்டும் ஆயின், அது அவர்களுடைய தொழிலுரிமைகளைப் பாதிக்கும் முறையில் இருத்தலாகாது.

**ஆசிரியர்களின் பிரதிநிதித்துவம் :** தேசீயநிலையிலும் சர்வதேசநிலையிலும் அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்ட கல்விச்சங்கங்களில் ஆசிரியர்சங்கங்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளித்தல் வேண்டும். தேசிய அளவில் ஆசிரியர்கௌரவத்தை உயர்த்துதற்காக, சமூகம், இராஜ்யம், குடிமக்கள் இவற்றின் நன்மையைக் கருதிய செயல்களில் கலந்து தலைசிறந்த பணி ஆற்றவேண்டுவது ஆசிரியர்களின் தலையாய கடமையாகும்.

**ஆசிரியர்களுக்குப் பரிசுவழங்குதல் :** புகழுக்குரிய வகையில் கல்வித்துறையில் தொண்டாற்றிய ஆசிரியர்களுக்கும் போதனைமுறையில் தலைசிறந்தவராய் இருந்த ஆசிரியர்களுக்கும் தனிப்பரிசுகள் வழங்குதல் வேண்டும்.

**ஆசிரியர்சங்கங்கள் :** ஆசிரியர்சங்கங்கள் வலிமையும் ஒற்றுமையும் உடையனவாய் இருத்தல் வேண்டும். அவை தங்கள் அங்கத்தினரின் நன்மைகளைமட்டும் கருதாமல், சமூகத்தின் நன்மையிலும் அக்கறைகாட்டித் தொண்டாற்றுதல் வேண்டும்.

**கல்வித்திட்டங்களை விருத்திசெய்தல் :** ஆசிரியர்களும் ஆசிரியர்சங்கங்களும், மாறுங்காலநிலைக்கு ஏற்றவாறு, தங்கள் கல்வித்திட்டங்களை மாற்றியமைத்து விருத்திசெய்தல்வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகின்றது.

குறிப்பு : 1. ஆசிரியர்கள் அரசியல்கட்சிகளோடு சேர்தற்கு உரிமை அளித்தல் வேண்டும்—என்னும் மகாநாட்டுச்சிபார்சினை, ஃபிலிப்பைன்ஸ், இந்தியா என்னும் இரு நாடுகளின் பிரதிநிதிகள் விரும்பவில்லை.



WCOTP-இன் காரியாலய உறுப்பினர்-(பதினொன்று பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள்)-ஸெகரெடரி-ஜனரல் வில்லியம் G. காரின் உருவப்படத்தின்முன் இருப்பதைக் காணலாம்.

உலக உணவு காங்கிரஸ், ஜூன் மாதம் 4–18–இல் வாஷிங்டன் (D.C.)–இல், ஒரு மகாநாடு கூட்டிற்று. அம் மகாநாட்டின் இறுதியில் பிரகடனப்பத்திரம்ஒன்று வெளியிடப்பட்டது. அதன்படி பசிபட்டினி, போஷணைக்குறை ஆகிய பிரச்சினைகளைப்பற்றி உலகம் நன்கு அறியச் செய்தல் வேண்டும் என்றும், அதற்கு ஏற்ற செயலைச் செய்ய மக்களையும் அரசாங்கங்களையும் தூண்டுதல் வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. பசிபட்டினி, போஷணைக்குறைவு இவற்றைப் போக்கும் இறுதிக்குறிக்கோளை அடையும்வரை, பசிபட்டினிவிடுதலையியக்கத்துக்குத் தங்கள் ஆதரவை முழுமனதுடன் அளிப்பதாக, அம் மகாநாட்டில் கலந்துகொண்டவர்கள் உறுதிமொழி கூறினர்.

WCOTP-இன் சார்பில் அமெரிக்க உள்நாட்டுப் பொருளாதாரச் சங்கத்தைச் சார்ந்த ஸ்ரீமதி லூயி ஹார்மன் என்பவரும், WCOTP-யைச் சார்ந்த ICHPER என்னுஞ்சங்கத்தைச் சார்ந்த ஜான் H. கூபர் என்பவரும், WCOTP-இன் கிராமக்கல்விச்சிறப்புக்கமிட்டியைச் சார்ந்த திருவாட்டி லோயி கிளார்க் என்பவரும் WOCTP-இன் பிரதிநிதிகளாக அம் மகாநாட்டுக்கு விஜயஞ்செய்தனர்.

இந்த முறையில் கூட்டப்பட்ட முதல்ஸர்வதேசமகாநாடு இதுவே ஆகும். UN-இன் 20-ஆம் ஆண்டுநிறைவு மகாநாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட உணவுஉழவுச்சங்கத்தின் ஆதரவில் அது நடைபெற்றது.

1. பசிவிடுதலையியக்கத்தைச் சார்ந்த தேசீய கமிட்டிகள் தொடர்ந்து வேலைசெய்யும் முறையில் அமைக்கப்படுதல் வேண்டும்; 2. UN–ஐச் சார்ந்த உணவுஉழவுச்சங்கத்தின் கிளைகளும் பிற சங்கங்களும் உள்ள இராஜ்யங்களிலும் பிரதேசங்களிலும் நன்கு பணியாற்றுந் தேசீய கமிட்டிகளை அமைத்தல் வேண்டும்; 3. உலகத்திலுள்ள ஜனத்தொகை, முன்னேற்றம் இவற்றோடு தொடர்புள்ள உலகஉணவுநிலையைப்பற்றியும், வருங்கால ஆக்கத்துக்குரிய திட்டத்தைப்பற்றியும் டைரக்டர்-ஜனரல் ஆராய்ந்து வெளியிட்ட உலகஉணவுவிவரணத்திலுள்ள குணங்குறைகளை ஆராய்தற்குக் குறிப்பிட்ட காலங்களில் உலகஉணவுமகாநாட்டைக் கூட்டுதல் வேண்டும்—என்னும் இம்மூன்று தீர்மானங்களும் அம் மகாநாட்டின் இறுதியில் நிறைவேற்றப்பட்டன.

FAO–இன் டைரக்டர்-ஜனரலான Dr. B. R. ஸென் அம் மகாநாட்டின் இறுதியில் பின்வருமாறு கூறினர்: "உலகப்பட்டினியை நீக்கும் பிரச்சினைநிலையில் FAO நிறுவப்பட்ட ஆண்டாகிய 1943–க்கும் 1963–க்கும் இடையே மூன்று பெருவேற்றுமைகள் இருக்கின்றன. முதலாவது: இப்பொழுது நாம் பசிபட்டினியையும் போஷணைக்குறையையும் போக்கும் முறையை நன்கு உணர்ந்திருக்கின்றோம். இதற்குமுன்பு மனிதன் செய்த அரும்பெருஞ்செயல்கள் யாவற்றையும், 1943–முதல் விளைந்துள்ள விஞ்ஞானமுன்னேற்றம், சிறியனவாய்ச் செய்துவிட்டன.

"இரண்டாவது: உலகில் உள்ள பசிக்கொடுமையை முன்பு அறிந்ததைவிட அதிகத்தொகையில் இக்காலமக்கள் அறிந்துள்ளனர். இதனினும் முக்கியமானது ஒன்று உளது. அது வருமாறு: ஏற்றத்தாழ்வு–

மனப்பான்மையின் வளர்ச்சி, முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்கும் நாடுகளின் அதிகரிக்குந் துன்பம், செல்வரைப் பின்னும் பெருஞ்செல்வராக ஆக்குதல்—ஆகிய இவை உலகமக்களால் நன்கு உணரப்பட்டுள்ளன.

"மூன்றாவது : முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்கும் நாடுகளுக்கே உதவியை அளிப்பது என்பது முன்னேற்றமடைந்த நாடுகளின் உறுதியான கொள்கையாகிவிட்டது.

ஸ்ரீமதி லோயி க்ளார்க் என்பவர், அக்கூட்டத்தில் ஆசிரியர்சார்பாகப் பேசியபொழுது, பின்வருமாறு கூறினர் : "இம் மகாநாட்டில் கலந்துகொண்டிருப்பவர், இப் பசிவிடுதலியக்கத்தை நடத்துதற்கு ஆசிரியர்சங்கங்களின் உதவியையும் பெறுதல் வேண்டும். கல்வித்திட்டங்களை, இக்காலவருங்காலத்தேவைகளையொட்டி நன்கு பயன்படும் முறையில் வகுப்பதற்குச் செய்யும் நம் முயற்சிகளுள் மிக முக்கியமானதும் பொருள்பொதிந்ததுமான பிரச்சினை யாதெனின், அது, உலகமக்களுக்கு இன்றியமையாத உணவினை விளைத்தல் விநியோகித்தல் தக்க முறையில் பயன்படுத்தல் என்னும் இவற்றைப்பற்றியதே யாகும். உங்கள் நாட்டில் பசிவிடுதலியக்கத்தில் பங்கெடுத்துக்கொள்ளுதற்கு நீங்கள் சேர்த்துக்கொள்ளும் பிற சங்கங்களோடு ஆசிரியர்சங்கங்களையும் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகின்றேன். அவ்வாறு செய்வதனால், உங்களுக்கு இரண்டுவித நன்மைகள் விளையும்: ஒன்று, உங்கள் முயற்சிக்கு அதிக வலிமையை அவர்கள் அளித்தல் ; இரண்டு, தங்கள் சொந்த முக்கியமான வேலையை இன்னும் நல்ல முறையில் செய்ய அவர்கள் பெறும் ஊக்கமும் உதவியும்.

---

WCOTP-யின் ஆதரவின்கீழ், 'கல்விப் படக்காட்சிகளின் சர்வதேச சங்க'த்தால் 1963-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-15 தேதிகளில் பாரிஸ் நகரிலுள்ள UNESCO தலைமைக்காரியாலயமாளிகையில் உலகமகாநாடொன்று நடைபெறும். அந்த ஐந்துநாள் மகாநாட்டிற்கு உரிய விஷயம் : தற்கால வருங்காலக்கல்வி—கேட்டுக்கண்டு கற்குங் கல்விமுறைஉபகரணங்களின் பங்கினைக் குறித்த திட்டம்.

கல்வியின் பல்வேறு பகுதிகளுக்குக் கேட்டுக்கண்டு கற்குங் கல்விமுறைஉபகரணங்களைப் பயன்படுத்தும் முறை, நிர்வாகம் செய்யும் முறை, அச் சங்கங்களுக்கு உரிய பொருளுதவி, சர்வதேசக் கூட்டுறவினை வளர்க்கும் முறைகள்—இவற்றைப்பற்றி அம் மகாநாடு பயன்படும் முறையில் ஆராய்தற்குத் திட்டமிட்டிருக்கின்றது. புதிதாக உரிமைபெற்ற நாடுகளில் இந்த உபகரணங்களைப் பயன்படுத்தும் முறையைப்பற்றிய ஆராய்ச்சி சிறப்பிடம் பெறும்.

அம் மகாநாட்டின் ஆதரவில் பொருட்காட்சியொன்றும் உண்டு. அதில் இந்த உபகரணங்கள் முதலியவை இடம்பெறும். அன்றியும், பேசும்படக்காட்சிகளும் 'டெலிவிஷன்' திட்டங்களும் இடம்பெறும்.

பாஷைகள், தற்காலத்தரைநூல், விஞ்ஞானம், கணிதம், தொழிற்கல்வி, முதியோர்கல்வி, போதனுமுறைக்கல்வி—இவற்றிற்கு அந்த உபகரணங்களைப் பயன்படுத்தும் முறைகளைப்பற்றி ஆராய, அம் மகாநாட்டில் தனித்தனிக்குழுக்கள் அமைக்கப்படும்.

இம் மகாநாட்டைப்பற்றி மேலும் அறியவேண்டுவோர், Mr. E.A.S. Hutchinson, the Conference Secretary, Educational Foundation for Visual Aids, 33 Queen Anne Street, London, W. 1., England—என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

'குழந்தைக்கல்வி உலகச்சங்கத்தின்' (OMEP) பத்தாவது சர்வதேச மகாநாடு 1964-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மீ 12-18 தேதிகளில் ஸ்டாக்ஹோம் நகரில் கூடும். விரைந்து மாறும் உலகில் குழந்தைகள்நிலை என்பது அக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் விஷயம்.

லண்டன் பொருளாதாரக்கலைக்கூடத்தில் 'டைரக்ட'ரான ஸர் ஸிட்னி கெய்ன் என்பவர், பாரிஸ் நகரில் உள்ள கல்வித்திட்டத்திற்குரிய ஸர்வதேசச் சங்கத்தின் டைரக்டர்களின் குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். UNESCO-வினுல் நிறுவப்பட்ட அச் சங்கம் ஜூலை மாதத்தில் பணிசெய்யத் தொடங்கிற்று.

முன்னேற்றமடைந்துகொண்டுவரும் நாடுகளின் கல்விநிலையைக் குறித்து ஆராய்வதற்கென்று நிறுவப்பட்ட முதல்ஆராய்ச்சிக்கழகம் அதுவேயாகும். அது கருத்தரங்குகள் நடைபெறச் செய்யும்; ஆராய்ச்சிகள் செய்யத் தூண்டும்; வளர்ச்சிபெற்றுவரும் நாடுகளில் பள்ளிக்கூடக் கல்விமுறைகளின் கருத்துக்களையும் சிறப்புப்பகுதிகளையும் எடுத்துச்சொல்லி, நிபுணர்களுக்கென்று வகுப்புக்களும் நடத்தும்.

அவ்வாராய்ச்சிச்சங்கத்தின் 'டைரக்டர்', ஃபிலிப் எச். கூம்ஸ்' என்பவர். அவர் பொருளியல்நிபுணர்; கல்விபண்பாட்டுத்துறைக்கு U. S. 'அஸிஸ்டென்ட் ஸெக்ரடரி ஆவ் ஸ்டேட்', என்னும் பதவியை வகித்தவர். அச் சங்கக்குழுவின் மற்றைய அங்கத்தினர் வருமாறு: லே அப்துலே (ஸெனகல்); ஹெல்மட் பெக்கர் (ஜெர்மனி); ஜி. பெதங்கர் மேஜியா (கொலம்பியா); ஸி. டி. தேஷ்முக் (இந்தியா), நிகோலஸ் கே. கோண்ட் காரோவ் (சோவியத் யூனியன்).

உலக வங்கி (Wold Bank), ஃபோர்டு ஸ்தாபனம், ஃபிரெஞ்சு அரசாங்கம், UNESCO—ஆகியவை அச் சங்கத்திற்கு வேண்டிய பொருளுதவியைச் செய்து ஆதரிக்கின்றன.

---

## ஐரோப்பா :

இருபது பிரிட்டிஷ் பள்ளிக்கூடங்களில் பழக்கத்திற்குக் கொண்டு-வரப்பட்ட 'விருத்தி செய்யப்பட்ட புதிய ரோமன் நெடுங்கணக்கு', குழந்தைகள் சிலரை நாலு வயதில் கதைஎழுதுபவராய்ச் செய்ய உதவியுள்ளது; பள்ளிக்கூடத்தில் ஐந்தாண்டுக்குழந்தைகள் சிலர், முதல் வருஷத்திலேயே, இரண்டாண்டுப் படிப்பினுக்குரிய வளர்ச்சியைப் பெறவும் உதவியுள்ளது. படிக்கக் கற்பிப்பதற்கு உரிய புதுமுறையை பிரிட்டிஷ் நிபுணர்கள் ஆராய்ந்துகொண்டிருக்கும் நாற்பத்துமூன்று எழுத்துக்களைக் கொண்ட நெடுங்கணக்கு முதன்முதல் அளித்த வெற்றி இதுவே யாகும். அந் நெடுங் கணக்கினுக்குப் பெரிய எழுத்துக்கள் (Capital letters) இல்லை. அந்த 43 எழுத்துக்களுள் ஒவ்வொரு வரிவடிவமும் ஓர் ஒலியையே குறிக்கும். படிக்கக் கற்பிக்கும் முறையை எளிதாக்கவும், கல்விகற்கத் தொடங்குங் குழந்தை-களின் மனத்தினின்று குழப்பமும் தன்னம்பிக்கையின்மையும் ஏற்படுதற்கு உரிய காரணங்களை நீக்கவும், அது பயன்படுகின்றது.

இப் புதிய நெடுங்கணக்கை, பிறர்வற்புறுத்துதல் இன்றி, தாமாகவே பயன்படுத்தி, மிகச்சிறு குழந்தைகளுக்குக் கற்பிக்கும் பள்ளிக்கூடத்தலைமை-யாசிரியர்கள், இப்பொழுது படிப்பதிலுள்ள தரம் உயர்ந்துள்ளது என்றும், குழந்தைகள் விரைவாகப் படிக்கின்றனர் என்றும், மெதுவாகக் கற்குங் குழந்தைகள் அதிக முன்னேற்றத்தை அடைகின்றன என்றும் அறிவிக்கின்றனர்.

ஏறக்குறைய எல்லாத்தலைமையாசிரியர்களும், இப்பொழுது குழந்தை-கள் மிக்க தன்னம்பிக்கை உடையவர்களாய் இருக்கின்றனர் என்றும், பிறர்உதவியின்றித் தாமே படித்தற்குரிய ஆற்றலைப் பெற்றிருக்கின்றனர் என்றும், கற்பனைக்கருத்துக்கள் அடங்கிய கட்டுரைகளை எழுதுவதில் வல்லவர்களாக இருக்கின்றனர் என்றும், தம் அநுபவத்தை வெளியிட்டுள்ளனர். லண்டன் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கல்விக்கழகத்தில் ஒரு பகுதியாகிய படிக்கும்முறையைப்பற்றி ஆராயும் நிலையத்துக்கு 'டைரக்டர்' ராக உள்ள திரு. ஜான் டௌனிங் என்பவரே இப் புதுமுறையை இங்கிலாந்தில் முதன்முதல் பின்பற்றத் தொடங்கியவர். அவர், இம் முறையைப் பின்பற்றிய பள்ளிக்கூடங்களில் கண்ட பலன்களை வைத்துக்கொண்டு, நம்பிக்கை அதிகரிக்கப்பெற்று, பின்னும் பல பரிசோதனைகளைச் செய்வார்.

['நியூஸீலாந்து எடுகேஷனல் இன்ஸ்டிட்யூட்' என்னுஞ் சங்கம் பிரசுரிக்கும் 'நேஷனல் எடுகேஷன்' என்னுஞ் சஞ்சிகையின் 1963 மார்ச்சு முதல் தேதி வெளியீட்டில் வெளியிடப்பட்ட இப் புதிய படிப்புமுறைப்-பரிசோதனையைப்பற்றிய ஆராய்ச்சிவிவரணத்தின் சுருக்கமே மேலே காணப்படும் பகுதி.]

---

நார்வே நாட்டில் ஆசிரியர்தொழிலுக்குப் புதிதாக வருவோருக்கு அளிக்கும் போதனுமுறைப்பாடத்திட்டங்களின் உள்ளுறை, இதற்கு-முன்பு அப் பயிற்சியைப் பெற்றோருக்கு இருந்த பாடத்திட்டத்தினின்று சிறிது வேறுபடும். 1961-62 பள்ளிக்கூட ஆண்டில், அந் நாட்டின் நகர-சபைகள் ஒன்பதாண்டுப் பள்ளித்திட்டத்தை மேற்கொண்டுள்ளன.

அதனுல், சில பாடங்களில் அதிகமான ஆசிரியர்கள் தேவைப்படுகின் றனர். அந் நகரசபைகளுள் இருபது இப் புதுத்திட்டத்தைக் கட்டாயப்படுத்தியுள்ளன.

வருகிற சில ஆண்டுகளில் இப் புதுக்கல்விமுறையை ஏற்றுநடத்தும் நகரசபைகளின் தொகை விரைவில் மிக அதிகமாகும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகஆசிரியர்தேவையை ஈடுசெய்யக் கல்வியமைச்சர் புதிய போதனுமுறைப்பயிற்சிவகுப்புக்களை அமைத்துள்ளார்; 1962-இல் அத்துறைக்கென்று 1·55 மிலியன் 'க்ரோனர்' மானியமாக அளித்துள்ளார். 1961-இல் அளித்த தொகை 1·24 'க்ரோனரே. 1961-இல் அளிக்கப்பட்ட அம் மானியங்கள்—கலைகள், தொழில்கள், விவசாயக்கல்வி, வீட்டுப்பொருளாதாரம், சங்கீதம், மெதுவாகக் கற்கும் மாணுக்கருக்குக் கற்பித்தல்—என்னும் இவற்றிற்கு அளிக்கப்பட்டன.

---

நடுக்கிழக்கு நாடுகள் :

1968 – 69 பள்ளிக்கூட ஆண்டுக்குள், படிக்கும்வயதுவந்த ஒவ்வொரு குழந்தையும் கல்விபெறுதல்வேண்டும் என்னும் தன் குறிக்கோளை அடைந்துவிடும் என்று 'டுனீஷியா' அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

சென்ற ஆண்டில் அந் நாட்டுப்பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணுக்கர்தொகை எதிர்பார்த்ததைவிட மிக மீறிவிட்டது. தொடக்கப்பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகள் 527,373 ; முன் ஆண்டினைவிட 45,850 அதிகம். 'ஸெகண்டெரி' பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட மாணுக்கர்தொகையும் மிக அதிகம்.

இவ்வாறு விரிவடையும் அந் நாட்டுக்கல்வித்திட்டத்துக்கு வேண்டிய அதிக ஆசிரியர்களை அளித்துதவுதற்கு, ஒவ்வொரு பொது 'ஸெகண்டெரி' பள்ளிக்கூடத்திலும் போதனுமுறைப்பயிற்சிக்குரிய கிளைப்பள்ளியொன்றும் அமைக்கப்பட்டுளது.

---

## ஆசியா :



மத்தியில் இருப்பவர், அகில இந்திய கல்விச் சங்கங்களின் ஸமஷ்டிக்குத் தலைவரான D. C. சர்மா ; இடப்பக்கத்தில் இருப்பவர், WCOTP-இன் ஆசிய 'ஸ்பெஷல் அஸிஸ்டென்'டான வில்லியம் E. உல்ரிச் ; வலப்பக்கத்தில் இருப்பவர் WCOTP 'இன்ஃபர்மேஷன் ஸர்விஸஸ் டைரக்ட'ரான பால்டுவின் E.லீ. திரு. சர்மா, இந்திய பாராளுமன்றத்தின் பிரதிநிதிகளுள் ஒருவராய் வாஷிங்டனில் (D. C.) தங்கியிருந்தபொழுது, WCOTP தலைமைக்காரியாலயத்துக்கு விஜயஞ் செய்தார்.

---

W C O T P - யின் ஆசியத்தலைவர்பயிற்சிக்கருத்தரங்குகளைத் தொடர்ந்து, KFEA (Korean Federation of Education Associations), சென்ற ஆண்டில் 11 மாகாணத்தலைவர்பயிற்சிக்கருத்தரங்குகளைத் கூட்டிற்று. அக் கருத்தரங்குகளில் 1,200 அறிஞர் பங்கெடுத்துக்கொண்டனர். பிரதேசங்களுக்கும் ஊர்களுக்கும் வேண்டிய தலைவர்களுக்குப் பயிற்சி அளித்து, KEEA, அதன் கிளைச்சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்-தொகுதியை வளர்த்து வலுப்படுத்த அக் கருத்தரங்குகள் கூட்டப்பெற்றன. சென்ற ஆண்டில் இரண்டு தேசீயத்தலைவர்பயிற்சிக்கருத்தரங்குகள் 'ஸியோல்' நகரில் நடைபெற்றன. ஒவ்வொன்றனுக்கும் எண்பதின்மர் விஜயஞ்செய்தனர்.

தொழிலமைப்புக்கொள்கை, பொதுமக்களோடு தொடர்பு, சட்ட-சபை நடவடிக்கைகள்—என்னும் இவை அக் கருத்தரங்குகளில் முதலிடம் பெற்றன. கல்வியாராய்ச்சிவளர்ச்சி, பொதுமக்களோடு நெருங்கிய தொடர்பு ஆசிரியர்சங்கங்களுக்குப் பொருளுதவிசெய்தல், ஆசிரியர் தொடுக்கும் வழக்குக்களை ஆராய்தல், தேசீய பிரதேச அரசியல்துறைகளோடும் கிராம-அரசியல்துறையோடும் ஒத்துழைத்தல்—என்னும் இவைகளும் அங்கு விவாதிக்கப்பட்டன.

---

இஸ்ரேல் நாட்டில் அந்நாட்டின் பொதுக்கல்வியறிவுநிலையை எட்டிப்பிடிக்க உதவுதற்காக, இவ்வாண்டுக்கோடையில், ஏறத்தாழப் பத்தாயிரம் தொடக்கப்பள்ளிக்குழந்தைகள், அதிகப்படியாக ஒருமாதம் பள்ளிக்குச் சென்று படிப்பர். வெளியிடங்களினின்று வந்து அங்குக் குடியேறிய குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்காகவே இத் திட்டம் வகுக்கப்பட்டது.

சிலருக்கு, பள்ளிக்கூடக்காலப்பகுதியைத் (School Terms) தொடர்ந்து, ஜூலை மாதத்தில் ஒருமாத அதிகப்படி வகுப்புக்கள் நடத்தப்படும். இன்னுஞ்சிலருக்கு, அடுத்துவரும் பள்ளிக்கூடக்காலப்பகுதிக்கு உதவும்பொருட்டு ஆகஸ்ட் மாதத்தில் அத்தகைய வகுப்புக்கள் நடை-பெறும்.

பிறநாட்டுமக்கள் குடியேறியுள்ள கிராமங்களிலும், அதிகப்பயிற்சி பெறவேண்டிய குழந்தைகள் உள்ள சில நகரப்பகுதிகளிலும், 250 முதல் 300 வரை இத்தகைய பள்ளிகள் அமைக்கத் திட்டம்வகுத்துள்ளனர்.

மாணக்கர் காலையில் நாலு மணிநேரம் அப் பள்ளியில் படிப்பர். அக் காலப்பகுதியின் ஒருபாதி பாடங்களுக்கும், மற்றொரு பாதி சமூகச்-செயல்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இயன்றவரை, அப் பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்களே இந்த அதிகப்படி வகுப்புக்களையும் நடத்துவர்.

---

## பஸிஃபிக் நாடுகள்

சென்ற ஆண்டில் பள்ளிக்கூடங்களில் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட மாணக்கரின் தொகை மிக அதிகமாயுள்ளது என்று 'ஆஸ்திரேலிய ஆசிரியர்கள் ஸமஷ்டி' அறிக்கையொன்று விடுத்துள்ளது. 1950-இல் அரசாங்கப்பள்ளிகளில் படித்த குழந்தைகளைவிட, 1960-இல் படித்த மாணக்கரின் தொகை 65 சதவிகிதம் அதிகமாயுள்ளது—என்பதே இதற்குத் தக்க சான்று. அச் சங்கம் இதற்கான மூன்று காரணங்களைக் கூறியுள்ளது : ஒன்று : குழந்தைகள் முன்பு இருந்ததைவிட அதிக ஆண்டுகள் பள்ளிக்கூடத்தில் தொடர்ந்து படிக்கின்றனர். இரண்டு : நாட்டில் மக்கள்தொகை மிக அதிகரித்துள்ளது. மூன்று : ஐரோப்பாவிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் மக்கள்பிறர் அண்மையில் இந்நாட்டிற்கு வந்து குடியேறியுள்ளனர்.

இவ்வாறு அதிகரித்துள்ள மாணக்கர்க்குக் கல்விகற்பிக்க, அதிக வகுப்பறைகள் தேவை ; அதிக ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு நியமிக்கப்படவேண்டுதல் அவசியம்—என்பது அனைவருக்கும் தெளிவாகப் புலப்படும். இச் சிக்கலைச் சமாளித்துத் தம் கடமையைச் செவ்வனே நிறைவேற்ற, ஆஸ்திரேலிய இராஜ்யங்கள் புதிய பள்ளிக்கூடக்கட்டிடங்கள் கட்டுந் திட்டங்களைத் துரிதப்படுத்துகின்றனர் ; புதிய போதனுமுறைக் கல்லூரிகளை நிறுவிவருகின்றனர். இத்தகைய விரிவுத்திட்டத்தின் அருமைபெருமைகள் அதற்காகச் செய்யப்படும் செலவிலிருந்து தெளிவாகப் புலப்படும். 1950-51-இல் கல்விக்கென்று 46 மில்லியன் பவுன் செலவிடப்பட்டது. ஆயின், 1960-61-இல் அதற்குச் செலவிடப்பட்ட தொகை 184 மில்லியன் பவுன் ஆகும். இதனல் அச் செலவு முன்னையினும் நான்கு மடங்கு என்பது தெளிவாக அறியப்படும்.

---

# WCOTP Offices

ACCRA : WCOTP Africa office, Post Office Box 209, Accra Ghana.

BEIRUT : WCOTP Arabic Publications Office, Post Office Box 4054, Beirut, Lebanon.

NAIROBI : WCOTP East Africa Regional Office, Sunglora House, P. O. Box 30407, Nairobi, Kenya.

NEW DELHI : WCOTP Asia Office, 16-A/10, Western Extension Area, New Delhi 5, India.

PARIS : WCOTP Paris Office, 12 rue de Ponthieu, Paris 8e France.

SAO PAULO : WCOTP Portuguese Publications Office, Rua Melo Palheta, 279, Cx. Postal, 4127, Sao Paulo, Brazil.

TOKYO : WCOTP Japan Pablications Office, No. 2 Takagicho, Aoyama, Minato-ku, Tokyo, Japan.

WASHINGTON : WCOTP Headquarters Office, 1227 Sixteenth Street, N. W., Washtington 36, D. C., U. S. A.

## ஆஃபிரிகா:

1963, பிப்ரவரி மாதத்தில் வெளியிடப்பட்ட "West African Journal of Education"—என்னுஞ் சஞ்சிகை, நைஜீரியாவில் நிகழ்ந்த கல்விபற்றிய முக்கிய நிகழ்ச்சியொன்றனை அறிவிக்கின்றது.

'The University College, Ibadan'—என்னுங் கல்லூரி 1963 அக்டோபரில் ஒரு சர்வதேச 'ஸெகண்டரி' பாடசாலையைத் திறந்து-வைக்கும். நைஜீரியாவில் இத்தகைய கலாசாலையொன்று நீண்டநாள்-தேவையாகும். அப் புதுப்பள்ளிக்கூடம், நைஜீரியா நாட்டுக்குழந்தைகளும் பிறநாட்டுக்குழந்தைகளும் உடனுறைந்து கல்விகற்றற்கு, எங்கும் இல்லாத இணையற்ற வாய்ப்புக்களை அளிக்கும்—என்று அக் கல்லூரி உறுதியாய் நம்புகின்றது ; அன்றியும், அது தற்காலக்கல்விக்கொள்கைகளையும் அனுபவத்தையும் நன்கு விளக்க முன்மாதிரியாக அமையும் என்றும் நம்புகின்றது. அக் கலாசாலையில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து கல்விபயில்வர். அவ்விடத்திலேயே தங்கி உணவுவசதியையும் பெற்றுப் படிக்க விரும்புவோர்க்கும், வெளியிலிருந்து வந்து படிக்க விரும்புவோர்க்கும் அது இடமளிக்கும். நானூறு மாணக்கர்க்குமேல் கல்விகற்குமாறு அது அமைக்கப்படும். அங்கு ஆறு வகுப்புக்கள் இருக்கும்.

அச் சர்வதேசகலாசாலை பரந்த அடிப்படையுள்ள கல்வித்-திட்டத்தை வகுக்கத் திட்டமிட்டுள்ளது. ஒவ்வொருவருடைய உடல் உள்ளம் ஒழுக்கம் முதலிய பலதரப்பட்ட வளர்ச்சி, தன்னடக்கம் ஒழுக்கம் இவற்றின் முன்னேற்றம், பொறுப்புணர்வு, பணியாற்றும் நல்ல வழக்கங்கள் இவற்றிற்கு அத் திட்டம் முதலிடம் அளிக்கும். அப் பள்ளியில் படிக்கும் மாணக்கர்க்கு நைஜீரியாவிலும் பிற நாடுகளிலும் மேற்கல்வியைப் பெறுதற்கு வேண்டிய பயிற்சியும் அளிக்கப்படும். அதற்கு வேண்டிய பல்வேறு பாடத்திட்டங்கள் வகுக்கப்படும். அவை நைஜீரியா, இங்கிலாந்து, அமெரிக்கா என்னும் நாடுகளில் உள்ள கீழ்க்காணுந் தகுதிப்பத்திரங்களைப் பெறுதற்கு ஏற்ற முறையில் அமைக்கப்படும் :

(a) The West African School Certificate.
(b) The Cambridge School and Higher School Certificate.
(c) G. C. E. Ordinary and Advanced Level.
(d) Entrance Requirements for College Education in the United States and elsewhere.

---

The Union Nationale des Instituteurs Haitiens என்னுஞ் சங்கத்தின் முன்னுள் ஸெக்ரெடரி - ஜனரலாக இருந்த கிளேபர் வீலாட் என்னும் அறிஞர் WCOTP-இன் 'ஆலோசனைகூறும் நிபுணர்' என்னும் முறையில், ஆஃபிரிகாவிலுள்ள ஃபிரெஞ்சுமொழி பேசும் நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்கின்றார். WCOTP-இன் உறுப்புச்சங்கங்களி-லும் பிற சங்கங்களிலும் அங்கத்தினராயுள்ள ஆசிரியத்தலைவர்களைக்

கண்டு, கலந்து உரையாடி ஆலோசித்துவருகின்ருர். அவர், அடுத்த ஸெப்டெம்பர் மாதத்தில் நயாமி என்னிமிடத்தில் நிகழவிருக்கும் WCOTP மகாநாட்டில், 'ஆஃபிரிக ஆசிரியர்களின் நிலை' என்பதைக்குறித்துத் தம் அறிவுரையைக் கூறி, வேண்டிய உதவி செய்வார்.

---

## ஆசியா :



க்விஜான் நகரில் இந்த ஜூன் மாதத்தில் (PPSTA) 'பிலிப்பைன் பப்ளிக் ஸ்கூல்' ஆசிரியர்சங்கத்தின் புதிய டைரக்டர்களும் பழைய டைரக்டர்களும் சேர்ந்து கூடிய கூட்டத்தில், WCOTP-ஆல் ஆசியாவுக்கென்று நியமிக்கப்-பட்ட 'ஸ்பெஷல் அஸிஸ்டென்'டாகிய திரு. வில்லியம் E. உல்ரிச் பிரசங்கம் செய்கின்ருர். இடமிருந்து வலம்: PPSTA உத்தியோகஸ்தர்கள்: ஏஞ்சல் வில்லரீல், காலா மனலோ, ரிகார்டோ காஸ்ட்ரோ (PPSTA-இன் ஸெக்ரெடரி-ஜனரல், முன்ஞள் WCOTP நிர்வாகக் கமிட்டியங்கத்தினர்); பழைய உத்தியோகஸ்தர்கள்: பெஞ்சமின் வாலிட்ஸ் (உபதலைவர்), ஸான்டோஸ் பாஸ்கல் (தலைவர்).

---

அண்மையில் UNESCO வெளியிட்ட பிரகடனம், தம் சூழ்நிலை-யைத் தெளிவான எளிய சொற்ருெடர்களால் விளக்குதற்குரிய ஆற்றலைக் குழந்தைகள் பெற்றுள்ளன – என்பதனை மெய்ப்பிக்கின்றது. அதன் பெயர் 'In Japan with Japanese children' - என்பது. கிழக்குமேற்குப் பண்பாட்டுப்பெருமையைப் பரஸ்பரம் பாராட்டுதற்காக அமைக்கப்பட்ட ஒரு பெருந்திட்டத்தின் பகுதி அவ் வெளியீடு. அது ஜப்பானிய தேசீய கமிஷனின் ஆதரவில் தயாரிக்கப்பட்டது. பாடப்புத்தகங்கள் தயாரிப்பதற்குப் பயன்படவும், 12-15 வயதுள்ள சிறுவர்களுக்குப் படிப்பதற்கு உரிய நற்பகுதிகளை அளிக்கவுமே, இது வெளியிடப்பட்டுள்ளது.

அவ் வெளியீடு மூன்று பகுதிகளை உடையது. "வடக்கிலிருந்து தெற்குவரை" என்பது முதற்பகுதி. அது ஜப்பானிலுள்ள மக்களின் வாழ்க்கையைப்பற்றிக் குழந்தைகள் விவரித்துள்ள செய்திகளைக் கொண்டது— டோகியோவும் அதன் விமானநிலையமும்: "விமானம் புறப்பட்டுச் சென்ற

பிறகு, அவ் விமான நிலேயம் திடீரென்று மிகப் பெரியதாகத் தோற்றமளிக்கிறது;" ஹொக்கைடோவில் மீன்பிடிக்குந் தொழில்: "மீன்வேட்டையாடுதற்குத் தக்கவாறு கடல்மீன்கள் ஆழம் குறைந்த இடத்திற்கு வரும்பொழுது, அவ் வேலையைச் சமாளிக்க, அவ்வூர்மக்களின் தொகைமட்டும் போதாது. அதனல், அவ்வூருக்கு வெளியே உள்ள செம்படவர் அங்கு வந்து உதவிசெய்கின்றனர்;" பனிப்பிரதேசத்தில் வளந்தகாலம்: "இருளிலிருந்து விடுபட்டதைக்குறித்து மலர்களும் குதூகலத்தோடு ஆடிப்பாடுகின்றனவோ என்று எண்ணும்படி அவை காட்சியளிக்கின்றன". ஒரு நெல்விளைவிக்குங் கிராமம், மேட்டுநிலப்பண்ணைகள், ஃப்யூஜி மலைமீது ஏறுதல்—என்பவை அக் குழந்தைகள் தெளிவாக வரைந்த கட்டுரைகளின் பிற தலைப்புக்கள்.

இரண்டாம் பகுதி, பள்ளிக்கூடவாழ்க்கையையும் வீட்டுவாழ்க்கையையும்பற்றி எழுதிய கடிதம். மூன்றும் பகுதி, ஆண்டுமுழுதும் நிகழ்வனவற்றை—('நாற்றுநடுந் திருநாள்', 'சேணியன் திருநாள்'—என்பன போன்ற சிறப்புக்காலங்களில் விளையாடும் விளையாட்டுக்களை)—சுருக்கமாக விளக்கிக் கூறுகின்றது.

இத்தகைய மாணக்கர்கட்டுரைத்தொகுதிகள் பிற ஆசிய நாடுகளிலுள்ள UNESCO தேசீயக் கமிஷன்களால் தயாரிக்கப்பட்டுவருகின்றன.

---

KFEA, கியோ தான் (ஆசிரியர்குரல்) என்னுஞ் சஞ்சிகையை வெளியிடத் தொடங்கியுள்ளது. அது மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும்; அச் சங்கத்தின் 76,000 அங்கத்தினருக்கு இனமாக விநியோகிக்கப்படும். 50 பக்கம் கொண்ட அச் சஞ்சிகையில், கல்வித்துறையாராய்ச்சிகளைப்பற்றிய அறிஞர்அறிக்கைளும் ஆசிரியத்தொழில்பிரச்சினைகளைப்பற்றிய செய்திகளும் இடம்பெறும்.

KFEA இப்பொழுது எகோ-வினைக் 'கொரிய'மொழியில் இரண்டு பதிப்புக்களாகப் பிரசுரிக்கின்றது. ஒன்று, அச் சங்கத்தின் வெளியீடாகிய சா கியோ-யுக் (New Education - புதுக்கல்வி) என்னும் பத்திரிகையிலேயே அச்சிடப்படுவது; மற்றொன்று, சிறப்புவிநியோகத்திற்காக அச்சிடப்படுந் தனிவெளியீடு.

[குறிப்பு: இது ஜுலை-ஆகஸ்டு 'எகோ'-வெளியீட்டின் பிற்பகுதியில் தமிழாக்கம்.]

---